**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 173/2022**

**வா.சா.1 –** கணபதிலெட்சுமி **21.01.2025**

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் தாவா வழக்கை பாக்கியத்திற்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து அதை பாக்கியம் அவரது மகனுக்கு எழுதிகொடுத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ஆதியில் தாவா சொத்து எனது மாமனார் இருளப்பனுக்கு பாத்தியப்பட்டது ஆகும். பாகப்பிரிவினையின் அடிப்படையில் தாவா சொத்து எங்களுக்கு கிடைத்ததாக நான் சொல்லியுள்ளேன். எனக்கு 22 வயதில் திருமணம் ஆனது. தற்போது எனக்கு 65 வயதிற்கு மேல் ஆகிறது. எனக்கு திருமணம் ஆன பின்பு பாகப்பிரிவினை நடந்தது எந்த வருடம் என்று எனக்கு தெரியாது. பாகப்பிரிவினையில் மொத்தம் எத்தனை சொத்துக்கள் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. பாகப்பிரிவினையின்போது எனது மாமனார் இருளப்பனுக்கும் சொத்து ஒதுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும். எனது மாமனாருக்கு எந்த சொத்து ஒதுக்கப்பட்து என்று எனக்கு தெரியாது. அதுபோல எனது கொழுந்தனார் மாதவனுக்கு எந்தெந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அது போல எனது கணவருக்கு எந்தெந்த சொத்துக்கள் பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்து என்று எனக்கு தெரியாது. அதுபோல மாதவனிடமிருந்து 1ம் பிரதிவாதி பாக்கியம் கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தான் தெரியும். எனக்கு திருமணம் நடந்த போது எனது கணவர் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்தார். எனது கணவர் 2010-ம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றார். எனது கணவர் மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் பணிபுரிந்து வந்தார். எங்கள் குடும்பம் மானாமதுரையில் தான் வசித்து வந்தது எனது கணவர் மட்டும் தினமும் வேலைக்கு சென்று மானாமதுரை வருவார். எனது கணவர் தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு 24.06.1982-ல் எழுதிகொடுத்த கிரைய ஒப்பந்தம் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரைய ஒப்பந்தம் எங்கு வைத்து யார் முன்னிலையில் எழுதப்பட்டது எவ்வளவு பணம் முன்பணமாக கொடுக்கப்பட்டது என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 செல் ரசீது எங்கு வைத்து யார் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது யார் பணம் கொடுத்தார்கள் யார் வாங்கினார்கள் எவ்வளவு பணம்கொடுத்தார்கள் என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.8

ஆவணத்தில் சாட்சியாக குறிப்பிட்டுள்ள மற்றும் தயார் செய்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் உ.பாக்கியம் என்று உள்ள கையொப்பத்தை யார் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.8 ஆவணம் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணத்தின் கீழே 27.07.1982 தேதியில் எனது கணவர் நடராஜன் இந்த 1ம் பிரதிவாதியிடம் ரூ.190 பணமும், ரூ.300 மதிப்புள்ள நெல்லும் பெற்றுக்கொண்டதாக கையொப்பம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எனது பிராதில் சொல்லவில்லை. வா.சா.ஆ.7 கிரைய ஒப்பந்தத்தின்படி 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தில் இன்று வரை விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, நாங்கள் தான் விவசாயம் செய்து வருகிறோம். தாவா சொத்தில் நான் நேரடியாக விவசாயம் செய்யவில்லை, கூலி ஆள் வைத்து விவசாயம் செய்து வருகிறேன் அதனால் தாவா சொத்து எங்குள்ளது யார் வயல் அருகில் உள்ளது போன்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கு திருமணம் ஆன பிறகு தாவா சொத்தை நான் நேரடியாக விவசாயம் செய்தது கிடையாது. எந்த கூலி ஆள் மூலம் விவசாயம் செய்து வருகிறேன் என்று அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு நிலஉடைமை மேம்பாட்டு திட்டகாலத்திலிருந்து இன்று வரை பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் இருந்து வருகிறது என்றால் சரிதான் அவர் தான் விவசாயம் செய்து எங்களுக்கு கொடுப்பார். வா.சா.ஆ.7 கிரைய ஒப்பந்தத்தின்படி முழு கிரைய தொகையும் எனது கணவர் பெற்றுக்கொண்டு எனது கணவர் சம்மதத்தின் பேரில் தான் தாவா சொத்திற்கு நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தில் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவரின் சம்மதத்தின் பேரில் தான் தாவா சொத்திற்கு பட்டா மாற்றப்பட்டது இன்று வரை 1ம் பிரதிவாதியின் பெயருக்கு தான் பட்டா இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு இன்று வரை எனது மாமனார் இருளப்பன் பெயரில் தான் பட்டா உள்ளது. எனது மாமனார் பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை நாங்கள் அனுபவம் செய்து வருவதற்கு வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்னோ என்றால் தாக்கல் செய்யவில்லை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது கணவர் வா.சா.ஆ.7 கிரைய ஒப்பந்த எழுதிக்கொடுத்த பின்பு நானோ எனது கணவரோ தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்திற்கு பிறகு தாவா சொத்தை எனது கணவரிடமிருந்து சுவாதீனம் பெற்று இன்று வரை அரசுக்கு செலுத்த வேண்டிய வரிவகையறாக்களை செலுத்தி 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால்

சரியல்ல. 40 ஆண்டுகளுக்கு மேலாக 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தை நீண்டனுபோக பாத்தியமாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல். 19.11.2011-ல் எனது கணவர் தாவா சொத்தை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தை செல்லாது என்று அறிவிக்க கோரி எனது கணவர் மாவட்ட ஆட்சியரிடம் வா.சா.ஆ.4 மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதுபோல 16.11.2011 தேதியில் எனது கணவர் 1, 2 பிரதவாதிகளிமிருந்து தாவாசொத்தை மீட்டுதரக்கோரி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் வா.சா.ஆ.5 புகார் மனு கொடுத்துள்ளார் என்றால்சரிதான். மேற்படி வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்களில் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் மோசடியானது என்று எனது கணவர் எழுதியுள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் 2018ல் இறந்துபோனார். எனது கணவர் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் மோசடியானது என்று மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்த விவரம் எனக்கு 2011ம் ஆண்டே எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது கணவர் உயிருடன் இருந்தவரை மேற்படி தான செட்டில்மெண்டை ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது கணவர் இறந்த 4 ஆண்டுகள் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். சட்டகாலத்திற்குள் நானோ எனது கணவரோ வழக்கு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு காலவரையறை சட்டத்தின்படி தடைசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 மாவட்ட வருவாய் அதிகாரியின் உத்தரவை ரத்து செய்ய கோரி 1, 2 பிரதிவாதிகள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு இன்றுவரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 மற்றும் 11 தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக 1, 2 பிரதிவாதிகள் உயர்நீதிமன்றத்தில் 2வது மேல்முறையீடு தாக்கல் செய்து நிலுவையில இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டு 40 ஆண்டுகளுக்கு மேலாக 1, 2 பிரதவாதிகளின் தனித்து சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்பதால் 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமையில் கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி நீண்டகாலமாக தனிதத பாத்தியத்தில் அனுபவித்து வந்து அதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுக்க சட்டப்படி உரிமையுடையவர் என்றால் சரியல்ல. அதனால் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் இல்லாநிலையது என்ற பரிகாரம் கோர எனக்கு எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. 1982 முதல் இன்று வரையில்

தாவா சொத்தை 1ம் பிரதிவாதியும் தானசெட்டில்மெண்டுக்கு பின்பு 2ம் பிரதிவாதியும் எங்களுக்கு தெரிய நீண்டனுபோக அனுபவம் செய்து வருவதால் தாவா சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவர் வா.சா.ஆ.7 கிரைய ஒப்பந்தம் எழுதிகொடுத்த காலத்தில் இருந்து நாங்கள் மானாமதுரையில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் எங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மேற்படி 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை 3ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை